பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 10 ஷஃபான் 8 இதழ்: 164

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-7-77

# தேர்தலின்பின் மோதுதலில் பலி!

## நிலைமை சீரடைகிறது

தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களிலும் கைகலப்புகளும் மோதல்களும் இடம் பெற்றுள்ளன. கொழும்பு நகரையடுத்துள்ள சில இடங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் இருபது பேராவது மாண்டிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து மூன்று மாவட்டங்களிலும் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப் பட்டுள்ளது.

நாட்டின் வேறுசில பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் தலையெடுத்தபோதிலும் பொலிஸார் தக்க தருணத்தில் நடவடிக்கை எடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

வடபகுதியில் பொதுவாக அமைதி நிலவியபோதிலும் வவுனியா, பருத்தித்துறை

(6-ம்பக்கம் பார்க்க)

# அமைதியை நிலைநாட்டுமாறு பிரதமர் மீண்டும் கோரிக்கை!

## பொலிஸாருக்கு உதவியாக ஆயுதப்படை; மன்னார், மஹியங்கனையிலும் ஊரடங்கு அமுல்

(கொழும்பு, ஞாயிறு)

நாடு முழுவதிலும் அமைதியும், ஒழுங்கும் ஏற்படவேண்டும் என்றும் சட்டத்தை நிலைநாட்டுவதில் அரசாங்கத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நாட்டு மக்களுக்கு நேற்று விடுத்த செய்தியில் கேட்டுள்ளார்.

நாட்டின் நாலா பகுதிகளிலும் அமைதியை நிலைநாட்ட அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும், இதன் ஒரு அம்சமாகவே சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதமரின் அலுவலகத்திலிருந்து இன்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிஸாருக்கு, ஆயுதப்படையினர் உதவியாக இருப்பார்கள் என்றும் அறிக்கையில் கூறப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### பாதுகாப்பு ஏற்பாடு

''நாட்டின் சில பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் தலை தூக்கியதைத் தொடர்ந்து, அமைதியை ஏற்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### பாடசாலைகள் திறக்கப்படும்

''முன்னர் அறிவிக்கப்பட்டபடி, பாடசாலைகள் மீண்டும் திங்கட்கிழமை திறக்கப்படும். ஆயுதப்படையினர் தங்கியுள்ள பாடசாலைகள் மட்டும் திறக்கப்படமாட்டாது.

''தவறணைகள், மதுபான விற்பனை நிலையங்கள் இன்றும் நாளை திங்கட்கிழமையும் மூடப்பட்டிருக்கும்.

### ''கடைகளை மூடாதீர்கள்''

''பொதுசனசாலைகள், மற்றும் கடைகளை மூடி, பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்பட இடமளிக்கவேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கிறது. வர்த்தக நிலையங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### ஊழியர்களுக்கும் பாதுகாப்பு

''இ. போ. ச. மற்றும் அரசு கூட்டுஸ்தாபனங்களுக்குச் சொந்தமான வாகனங்களைத் தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது குற்றமாகும். பெட்ரோலிய கூட்டுஸ்தாபனம், இ. போ. சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு விசேஷ பாதுகாப்புகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### ஊர்வலத்துக்கு தொடர்ந்து தடை

பொலிசாரின் முன் அனுமதியின்றி ஊர்வலங்கள் நடத்தக் கூடாது. மோட்டார் போக்குவரத்து கமிஷனரின் அனுமதியின்றி லொறிகளில் மூவருக்கு அதிகமாகச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

### ஆயுதப்படை

''நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும், சட்டத்தையும் நிலைநாட்ட பொலிஸார் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு ஆயுதப்படையினர் உதவியாக இருப்பார்கள்.

''நாட்டின் சில பகுதிகளில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டபோதிலும், இரண்டொரு தினங்களில் நிலைமை வழமைபோலாகி பூரண அமைதி நிலவும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது'' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு உத்தரவு

ஊரடங்குச்சட்டம் நேற்றிரவு மன்னாரிலும், மஹியங்கனையிலும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது.

மன்னாரில் நேற்றிரவு 9 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம், இன்று நண்பகல் 12 மணிவரை அமுலில் இருக்கும்.

மஹியங்கனையில் நேற்றிரவு 9 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்றுகாலை 5 மணிவரை அமுலில் இருந்தது.

இதுதவிர நேற்று முன்தினமிரவு, கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும், கொழும்பு மாவட்டத்திலுள்ள திவுலுபிட்டியா, மினுவாங்கொடை, நித்தம்புவ ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இரவு 9 மணி முதல் காலை 5 மணிவரை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து இன்றும் நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறையில் துப்பாக்கிச்சூடு!

## ஆயுதப்பொலிசார் காவல்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்தனர்.

அரசியல் கருத்து வேறுபாடே இச்சம்பவத்திற்குக் காரணம் என கூறப்படுகிறது. எஸ். ராமகிருஷ்ணன், பி. யோகரத்தினம் ஆகிய இருவருமே காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்கள் ஆவர்.

பருத்தித்துறைப் பகுதியில் மேலும் சில சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிகிறது.

கொந்தளிப்பு ஏற்படா வண்ணம் பருத்தித்துறை பஸ் நிலையத்திலும் முக்கிய சந்திகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல்புரிகின்றனர்.

அமைதியை நிலைநாட்டி அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்ட் ஸ்மித்சில்வாவும் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேனநாயகாவும் ஈடுபட்டுளளனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

# விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்

## நீடிப்பு உத்தரவு ரத்து!

கொழும்பு, ஞாயிறு

உள்ளூராட்சிமறன்த் தேர்தல்கள் அதிவிரைவில் நடைபெறும் என்று உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு.ஆர்.பிரேமதாச இன்று அறிவித்துள்ளார்.

''உள்ளூராட்சிமன்றங்களின் சேவைக் காலத்தை நீடிக்க முன்னர் விடுக்கப்பட்ட உத்தரவுகள் உடனடியாக ரத்துச் செய்யப்படுகின்றன'' என்று அமைச்சர் அறிவித்துள்ளார்.

# ''மக்கள் தீர்ப்பை தயக்கமின்றி ஏற்கிறேம்''

## முன்னாள் பிரதமர் கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு

''பெரும்பாலான மக்கள் அளித்துள்ள தீர்ப்பை நானும், எனது கட்சியும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்கிறேம்'' என்று முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்துள்ள செய்தியொன்றில் கூறியுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாசகம்

எவ்வாறு ஒருமனிதன் தன்னால் கண்டுகொள்ள முடியாத தன்முதுகைப் பிறர் காண்பரோ, அதே போல் எங்களால்எங்கள்பிழைகளைக் காணமுடியாது.

- காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# புதிய அமைச்சரவை

மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பை ஏற்று ஐக்கியதேசியக்கட்சியின் தலைவரான திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளார் தமது அமைச்சரவையையும் அவர் அமைத்திருக்கிறார்.

புதிய அமைச்சரவையில் ஒரு தமிழர் இரண்டு முஸ்லிம்கள் உட்பட இருபத்திமூன்றுபேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதி அமைச்சர்களும் இருபத்திஆறு பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட தமிழர்களில் ஒருவரே வெற்றியீட்டினார். அவருக்கே அமைச்சரவையில் இடம்கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதிஅமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் கல்குடாப் பிரதிநிதியான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் அரசியலில் நிறைந்த அனுபவமுள்ளவர். நீண்டகாலம் ஆட்சிமன்ற உறுப்பினராக இருப்பவர். தமிழ்மக்களின் பிரச்சினைகளில் குரல்கொடுத்தவர்; தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஒருகாலத்தில் ஒத்துழைப்புக் கொடுத்தவர்.

புதிய அமைச்சரவையில் ஐக்கியதேசியக் கட்சியின் முன்னைய அரசாங்கங்களில் அமைச்சராக இருந்த சில பழையவர்கள் இடம்பெற்றிருந்தாலும் இளைஞர்களும் துடிதுடிப்பானவர்களுமான சில புதிய முகங்கள் இடம் பெற்றிருப்பது நாட்டின் எதிர்காலம் விறுநடையில் செல்லக்கூடியநம்பிக்கையை அளிப்பதாகவுள்ளது.

முன்னைய அரசாங்கம் உருவாக்கிய புதிய குடியரசு அரசியலமைப்பில் பலகுறைகள் இருந்தாலும் பேரவைக்கு எந்த உறுப்பினர்களையும் நியமிப்பதில்லை என்ற அம்சம்சிறந்ததாகும்.

முன்னைய அரசாங்கத்தினால் பேரவையில் நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருந்த இருவர் அமைச்சர்களாகப் பணியாற்றினர். இவர்களில் ஒருவர் மிகப் பொறுப்பு வாய்ந்த கல்வி அமைச்சராக இருந்தவர்; மற்றவர் தபால் தந்தி அமைச்சின் பொறுப்பை ஏற்றிருந்ததுடன் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாகவும் அரசாங்கத்தால் கணிக்கப்பட்டார்.

இந்தத் தேர்தலில் இந்த இருவருமே மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டனர். பெரும் பொறுப்பு வாய்ந்த பதவிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் முன்னர் ஒப்படைக்கப்பட்டிருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இப்படி ஒரு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது என்று கருதவும் இடமுண்டு.

இதே சமயம் முன்னைய அரசாங்கம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குச் சில பகுதிகளில் முக்கியத்துவம் கொடுக்க மறுத்தது. முக்கியத்துவம் மிக்க அரசியல் அதிகாரி என்ற பொறுப்பு வாய்ந்த பதவியைக்கூட மக்களால் தெரிவுசெய்யாதவர்களிடமும் ஒப்படைத்திருந்தது.

கட்சியின் வளர்ச்சியை மட்டுமே கருத்திற்கொண்டு அந்த அரசு செயல்பட்டதால் போலிகள் தலையெடுத்துத் தம்மை வளர்த்துக்கொண்டனரே தவிரக் கட்சியின் வளர்ச்சிக்கோ நாட்டின் முன்னேற்றத்திற்கோ உழைக்கவில்லை என்பதையும் இந்தத் தேர்தல் முடிவு தெளிவாக்கி விட்டது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துவிட்டதால் முன்னைய அரசாங்கத்தில் சுகம் அனுபவித்தவர்களும் அவர்களைப் பார்த்து அதைவிடக் கூடிய சுகத்தை அனுபவிக்கலாம் என்றும் மனப்பால் குடிக்கும் போலிகள் இன்னும் தலையெடுக்கக்கூடும்.

ஆனாலும் ஜனநாயகத்தில் உண்மையான நம்பிக்கை கொண்டுள்ள பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன போலிகளுக்கு இடம் அளிக்கமாட்டார் என்றே எதிர்பார்க்கலாம்.

தகுதிக்கும் திறமைக்கும் முதன்மையளிப்பதே தமது கொள்கையென்று திரு. ஜே. ஆர். முன்னரே தெரிவித்திருக்கிறார்.

இதே கொள்கையைப் புதிய அமைச்சர்களும் பின்பற்றுவார்களென்று நம்பலாம். முன்னைய அரசாங்கம் விட்ட தவறுகள் புதிய அரசாங்கத்திற்கு ஒரு படிப்பினையாக அமையவேண்டும்.

# லயன்ஸ் ஆதரவுடன் பஸ் தரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்.லயன்ஸ் கழகம் பிரயாணிகள் தங்குமிடம் நான்கை யாழ்.மின்சார நிலைய வீதியில் பொதுமக்கள் ஆதரவுடன் நிறுவி இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ். டிப்போவிடம் கையளித்துள்ளது. இவை காரைநகர் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கான பகுதி பஸ்நிலையமாக இயங்கும். காரைநகர் பஸ் பாதை 782, 781, 786, 789 பிரயாணிகள் இத் தரிப்புநிலையங்களில் நின்று பிரயாணம் செய்யலாம்.

இவற்றில் மூன்றை, மில்க்வைற் தொழிலகம், சின்னத்துரைசகோதரர்கள், திருமதி பி. ஞானசுந்தரம் ஆகியோரும் ஒன்றையாழ். லயன்ஸ்கழகமும் நிறுவியுள்ளன இவற்றை யாழ். டிப்போவிடம் ஸி.மகேசன், மாவட்ட கட்டுப்பாட்டாளர், இ.போ. சபைதிரு.நவரெத்தினம்திரு. ஜி.எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் திறந்துவைத்தனர். (கெ)

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன் அரசினரால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய முறைப் பாடத்திட்டத்தின்படி இன்றைய மாணவர்களும் எதிர்கால மக்களும் மிகுந்த பயன்பெறுவர். மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் பாடங்களில் முதன்மைபெற்று விளங்குவது 'செயற்திட்டம்' என்ற புதிய பாடமாகும். இது ஏனைய பாடங்களிலிருந்து முற்றாக வேறுபட்டதொன்றாகும். இதன்மூலம் மாணவர்க்கும் வெளியுலகிற்குமிடையே இறுகிய பிணைப்பு ஏற்பட வழியாகின்றது. வெளியுலகோடு எந்த அளவிற்கு அதிக தொடர்புகொள்ளுகின்றனரோ அந்த அளவிற்கு அவர்களின் அறிவும் அனுபவமும் விருத்தியடைகின்றன. ஒவ்வொரு பாடசாலையும் அதன் சூழலுக்கும் வசதிக்கும் ஏற்றவிதத்தில் பலபிரிவுகளைக் கொண்ட இச்செயற்திட்டம் ஒன்றில் விரும்பியதைத் தேர்ந்துகொள்ளலாம்.

இச்செயற்திட்டத்தின் நான்கு பிரிவுகள் பின்வருவனவாகும்.

சுயமுயற்சியால் ஊதியம் பெறல், சுகாதாரமும் துப்பரவும், படிப்பித்தல், நீர்த்திட்டம்.

இவைபோன்று இன்னும் பலநூறு பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன. எமது பாடசாலை மாணவிகளான நாம் தேர்ந்தெடுத்தது சுயமுயற்சியால் ஊதியம்பெறல் என்ற பிரிவாகும். இப்பிரிவினை நாம் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமும் இல்லாமலில்லை. இன்று படித்துப்பட்டம் பெற்றவர்கள் அரசாங்க வேலைக்காகத் தவம் கிடக்கும் நிலை நமது நாட்டில் ஏற்படக்கூடாது என்ற நோக்குடன்தான் நாம் இதனைத் தேர்ந்தெடுத்தோம்.

ஒவ்வொருவனும் ஒரு தொழிலாவது செய்யக்கூடிய நிலையில் இருந்தால் வேலையில்லாப் பிரச்சினை இல்லாமலே தீர்ந்துவிடும். எனவே இந்த எண்ணத்தை மக்களிடையே புகுத்தி அவர்களுக்கு உற்சாகமளித்து அவர்களைப் புதிய பாதைக்கு இட்டுச் செல்வதே எமது புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். இதனைச் செயற்படுத்தும் விதத்தில் நாம் எமது பாடசாலைச் சூழலில் உள்ள

## புதிய கல்வித்திட்டம்:

# பெரும் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும்

வீடுகளைச் சந்திக்க எமது ஆசிரியையுடன் புறப்பட்டோம். வேலையற்றிருக்கும் இளம்பெண்களைக் கண்டு அவர்களுக்கும் எமது நோக்கத்தை எடுத்துரைத்து அவர்களும் பயன் பெறவேண்டும் என்பதுதான் நம்மனைவரினதும் தணியாத ஆவலாகும்.

நாம் சென்ற முதல்வீட்டிலேயே எமக்குப் பெரும் எதிர்ப்பே கிடைத்தது. எமது மனதைத் தளரவிடாது திடப்படுத்திக்கொண்டு அடுத்தவீட்டை நோக்கி நடந்தோம். எமது நோக்கத்தை அவர்களுக்கு எடுத்துரைத்தோம். மகிச்சியோடு எம்மை வரவேற்றனர். ஏனைய வீடுகளுக்கும் சென்றபோது ஆங்காங்கே எதிர்ப்பும் வரவேற்பும் கிடைத்தன. இந்த வீட்டுத் தரிசிப்புகளின் புள்ளி விபரங்களின்படி அதிகமான இளம்பெண்கள் க. பொ. த. சாதாரண படித்துவிட்டு இன்னும்சிலர் சித்தியடைந்துவிட்டு தமது எதிர்காலத்தை எண்ணியெண்ணிப் பெருமூச்சு விட்ட வண்ணம் வாழ்கின்றனர்.

இன்னும் அதிகமான பெண்கள் தையல், மனையியல், பின்னல், ஓவியம், பூவேலை போன்ற பலவிதமானதொழில்களைக் கற்றிருந்தாலும் இவற்றைத் தொழிலாக ஆரம்பிக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கைமுதல் இல்லாதது ஒரு காரணம், மற்றையது அவர்களிடம் காணப்படும் ஒருவிதமனப்பயம் எமது பதிப்பீட்டின்படி மாணவிகளாகிய எமக்கு இவர்களுக்கு வேண்டிய அறிவுரையையோ புத்திமதியையோ வழங்கமுடியாது. சுயமுயற்சியால் ஊதியம் பெறுவோரைச் சந்தித்து அவர்கள்மூலம் அவர்களது தொழில்முறைகளை அறிந்து இப்பெண்களுக்குக் கூற முடியும்.

இந்த முடிவின்படி எமது சுற்றுவட்டாரத்தில் தனியாக தொழில்நடத்தும் பலரை பேட்டிகாணச் சென்றோம் தையல்நிறுவனங்கள், சமையல் வகுப்புகள், கோழிப்பண்ணை, தேனீ வளர்ப்பு, காலணிகள் தயாரிப்போர், பின்னல்வேலை, சாயமூட்டல், நடன வகுப்புகள், சங்கீத வகுப்புகள், பூச்செய்தல் போன்ற பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு விபரங்களைச் சேகரித்தோம்.

இவை அனைத்தையும் அட்டவணைப்படுத்தி ஆராய்ந்ததன் மூலம் சுயமுயற்சியால்ஊதியம் பெறும் வழியைப் பற்றியும் ஒரு தொழிலைத் தொடங்க வேண்டிய முதலைப்பற்றியும், தொழில்களை நடாத்தும்விதம் என்பனபற்றியும் ஓரளவு அறிந்துகொண்டோம்.

இப்புள்ளி விபரங்களை உதவியாகக்கொண்டு நாம் முதலில் சந்தித்த பெண்களை மீண்டும் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்வதே எமது திட்டமாகும். இந்தச் செயல்முறைத் திட்டத்தின்மூலம் எமக்கும் ஏனையோர்க்கும் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

அரசின் புதியமுறைக் கல்விக் திட்டம் நிச்சயம் நாட்டில் ஒரு பெரும் பொருளாதாரப் புரட்சியை உண்டுபண்ணும் என்பது திண்ணம்.

-செல்வி விஜித்தா தம்பு
(நல்லாயன் மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை)

## யாழ்ப்பாணத்தில் பொதுப் பிரியாவிடை

அரியாலை, ஞாயிறு

கொழும்பு அத்தியட்சாதீனத்தின் ஆண்டகையாகப் பணிபுரியும் அதி வணக்கத்துக்குரிய ஆண்டகை சிறில் அபயனுயக்கா இவ்வாண்டுடன் தமது பதவியிலிருக்து இளைப்பாறவிருக்கிறார்.

கொழும்பு அத்தியட்சாதீன சபைகளின் சார்பிலும் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ மக்களின் சார்பிலும் அவருக்கு பொதுப்பிரியாவிடை ஒன்று அடுத்த மாதம் 8-ம் திகதி யாழ்ப்பாணம் பரியோவான் ஆலயத்தில் அதி வணக்கத்துக்குரிய ஆர்ச்பீக்கன் ஜே. ஜே. ஞானப்பிரகாசம் தலைமையில் அளிக்கப்படவிருக்கிறது. (அ)

## பரமாசாரிய சுவாமிகள் விரிவுரை

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் கந்தபுராண தொடர் விரிவுரை இடம்பெற்று வருகிறது.

இடையிடையே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (அ)

## "குடிநீர் வழங்குக"

புங்குடுதீவு, ஞாயிறு

'புங்குடுதீவில் கடும்வரட்சி நிலவுகிறது. இதனால் கால்நடைகள் தாகமிகுதியால் தவித்தலைவதோடு, பொதுமக்களும் குடிக்க நீரின்றிப் பெரிதும் கஸ்டப்படுகின்றனர். சிறிதளவே ஊறும் நன்னீர்க் கிணறுகளை நோக்கி கொழுத்தும் வெயிலிலும், கும்மிட்டிருட்டிலும் தாய்மார்கள் நடந்துசெல்லும் காட்சி மிகவும் பரிதாபகரமாக உள்ளது. பொதுமக்கள் படும் இச்சொல்லொணுக் கஷ்டத்தைப் போக்குமுகமாக வழமைபோல் வேலணை சாட்டியில் இருந்து லொறிமூலம் குடிநீர் வழங்கும் சேவையை ஆரம்பிக்க உடன்நடவடிக்கை எடுக்கவும்'.

இவ்வாறுகோரும் தந்திகளை கொழும்பு சமூகசேவைப்பகுதி அதிபருக்கும், யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் புங்குடுதிவு, ஊரதீவு கிராமஅபிவிருத்திச்சங்கத்தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் அனுப்பிவைத்துள்ளார். [அ]

## நுணசையில் கதிர்காமத் திருவிழா

மாவிட்டபுரம், ஞாயிறு

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் கதிர்காமத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றுவருகிறது.

கடந்த 16-ம் திகதி கதிர்காமக்கொடியேற்ற தினத்தன்று ஆரம்பமான இக்கதிர்காமத்திருவிழா தினமும் கதிர்காமத்தில் நடப்பதுபோல் மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 31ம் திகதி கதிர்காமத்தீர்த்தத்தன்று இங்கும் தீர்த்தத் திருவிழாவும் இரவு கற்பூரத்திருவிழாவும் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. (அ)

## சிறப்பான பஸ் சேவை

### அமைச்சர் ஒத்துழைப்பு கோருகிறார்

கொழும்பு, ஞாயிறு

"நாடு முழுவதும் சீரான பஸ்சேவை நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு புதிய போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். மொஹமத் இ. போ. ச. ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும் கூறியிருப்பதாவது:- "நாடெங்கும் சிறப்பான விதத்தில் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதில் இ. போ. சவுக்கு உள்ள பெரும் பொறுப்பை நான் உணர்வேன். சகல இ. போ. ச. ஊழியர்களும் நியாயமான விதத்தில் நடத்தப்படுவர். சகல ஊழியர்களையும் எவ்வித பயமுமின்றி வேலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன். பிரயாணிகள் கஷ்டமின்றி பிரயாணங்களை மேற்கொள்ள ஊழியர்கள் உதவவேண்டும்." (உ)

## 22 பேர் மொட்டை அடித்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளர் ஒருவரின் வெற்றியை எதிர்பார்த்து மொட்டையடிப்பதாகப் பந்தயம் பிடித்த யாழ்ப்பாணம் மாநகரசபைச் சுகாதாரத் தொழிலாளர்கள் 22 பேர் தங்கள் பந்தயத்தை நிறைவேற்றி மினுங்கும் தலையுடன் வீதிவலம் வந்தனர். (கூ-அ)

## ஒத்திவைப்பு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை தேசிய லொத்தர் சபையின் 624-வது சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இன்று நடைபெறவிருந்த இச்சீட்டிழுப்பின் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று லொத்தர் சபை தெரிவித்தது. (உ)

இந்தியாவின் புதிய ஜனதிபதி:

# சஞ்சீவரெட்டி இன்று பதவியேற்கிறார்

புதுடில்லி, ஜூலை. 24
இந்தியாவின் 6-வது ஜனதிபதியாக எதிர்ப்பின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. நீலன் சஞ்சீவ ரெட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பதவி ஏற்பார்.

இந்திய சரித்திரத்தில் திரு. ரெட்டியே ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனதிபதி ஆவார்.

ஜனதிபதி பதவிக்கான வேட்புமனுக்களை வாபஸ் பெறும் இறுதித்தினமான இன்று மாலை 3 மணிக்கு தேர்தல் அதிகாரி திரு. ரெட்டியின் தெரிவை ஊர்ஜிதம் செய்வர்.

64 வயதான திரு. ரெட்டி இளமையிலேயே அரசியலில் ஈடுபட்டு 46-ம் ஆண்டு முதன் முதலில் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு விவசாயக் குடும்பதில் பிறந்த இவர் உயர் பதவிகளை வகித்ததுடன் பல தடவைகள் அமைச்சர் பதவியும் வகித்துவந்தார்.

1969-ம் ஆண்டும் திரு. சஞ்சீவரெட்டி முதல் தடவையாக ஜனதிபதியாகப் போட்டியிட்டு தோல்வி அடைந்தது தெரிந்ததே. (இ)

## ஐ.நா. செயலாளர் கண்டனம்

லண்டன், ஜூலை 24
ரொடீஷியாவில் அடுத்த வருடம் பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு இயன்ஸ்மித் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைக்கு ஐக்கியநாடுப் பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கலாநிதி வால்ட்ஹெய்ம் தமது கண்டனத்தில் தெரிவித்திருப்பதாவது:

ரொடீஷியாவின் பெரும்பான்மை இனத்தவராகிய கறுப்பர்களின் சுதந்திரம் பறிக்கப்படும் வித்திலே பொதுத்தேர்தல் இடம்பெறும் என்றும், கறுப்பின மக்களின் ஒத்துழைப்புடன் சுதந்திரம் ஏற்பட முடியும் என்றும் கூறியுள்ளார்.

எனவேதேர்தலைநடாத்திகுந்தங்களை ஏற்படுத்தவேண்டாம்என்றும்இக்கண்டனத்தை எல்லா நாடுகளும் வரவேற்கின்றன என்றும் மேலும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கு கடத்தஇருந்த துணிமூடை சென்னையில் மீட்பு!

### மூவர் கைது; காரும் பறிமுதல்

சென்னை. ஜூலை 24
தமிழ்நாடு சம்பைப் பட்டணத்தில் இலங்கைக்கு கடத்திச் செல்லுதற்காக எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பட்டு, பருத்தி துணி மூடைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளர்.

வீதியில் சென்ற கார் ஒன்றை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோதே பொலிசார் இந்த 4 மூடை துணிகளையும் கைப்பற்றினர்.

காரில் சென்ற மூவரும் கைது செய்யப்பட்டதுடன் காரும் பறிமுதல் செய்யப்பட்டது. (இ)

...

## சீனு செல்வார்

நியுயோர்க், ஜூலை, 24
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பிரதம செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் சீனுவுக்கு ஒருவாரகால விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவிருக்கிறார். [உ]

## சிறிமாவின் காரியதரிசிக்கு ஒலிபரப்பு தலைவர்பதவி!

கொழும்பு, ஞாயிறு
இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தின் புதிய தலைவராக திரு. எம். டி. டி. பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒலிபரப்பு மா அதிகாரியாகவும். இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள திரு பீரிஸ், முன்னர் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் செயலாளராகவிருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது! இந்த நியமனத்தை நேற்று பிரதமர் திரு, ஜே. ஆர். ஜயவர்த்தன வழங்கியிருந்தார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தின் இயக்குநர்கள் சபையில், எதிர்க்கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்று தேர்தல் பிரசாரக் காலத்தில் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன வாக்களித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. நேற்று புதிய பிரதமராக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஜனதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு பிரதமர் அலுவலகம் திரும்பியதும் இந்த நியமனத்தை வழங்கினர்.

பிரதமர் திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் காரியதரிசியாக திரு. டபிள்யு. எம். பி. பி. பி. மெனிக்திலக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'உட்பகையை மறந்து தமிழ் ஈழத்திற்குப் போராடுவோம்'

— பண்டிதர் இரத்தினம்

யாழ்ப்பாணம், திங்.
"தேர்தல் சகாப்தம் முடிவடைகிறது. தேர்தல்மூலம் நம்மிடையே பகைமையை வளர்த்திருந்தால் அது இன்றுடன் முடிவடையவேண்டும். நாம் இனி ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள், நான் இத்தொகுதி மக்கள் அனைவருக்கும் தேசியப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். எனவே தேர்தல்மூலம் வளர்த்த பகைமையை, குடும்பச்சண்டையாக்காமல், விடுதலையுணர்வுடன் தமிழீழம் பெறும் பணியில் போராடவேண்டும்".

இவ்வாறு ஊர்காவற்றுறைத் தொகுதிதேசியப்பேரவைஉறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்து வங்களாவடியில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் பேசுகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தேர்தல் மூலம் நாம் இழந்த உரிமைகளை மீட்கமுடியாது. நமது இறைமையைப்பேண தமிழீழம் அமைக்கின்ற பணியை மிகத் தீவிரமாக்கவேண்டும். கடந்தகாலங்களிலும் பார்க்க, உலக அரங்கில் எமது கோரிக்கையை வலுவூட்டுவதற்கு அநுமையான சந்தர்ப்பம் இதுவே. இந்நேரத்தில் எமது ஒற்றுமை சிதருமல் மேலும் நாம் பிரிக்கமுடியாத ஒற்றுமைக் காணவேண்டும்".

(கெ-அ)

## உதவிப் பொலிஸ் அதிபருக்கு 'அமிர்' பாராட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு
காங்கேசன்துறைப் பகுதியில் அண்மைக் காலத்தில் பொலிசார் நடந்துகொண்ட முறையினுல் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த பீதிகாரணமாக இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் அமைதியான முறையில் நடக்குமா என இருந்துவந்த சந்தேகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் எடுத்த நடவடிக்கையால் கூட்டம் வெகு சிறப்பாகவும் அமைதியாகவும் நடந்தது.

மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து

(5-ம் பக்கம் பார்க்க)

தமிழ்நாடு மேல் சபைக்கு:

# மாறன், மூப்பனர் உட்பட அறுவர் தெரிவு

சென்னை, ஜூலை 24
தமிழ்நாடு சட்ட மேல்சபைக்கு தி. மு. கவைச் சேர்ந்த திரு. முரசொலிமாறன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கருப்பையா மூப்பனர் உட்பட ஆறு உறுப்பினர்கள் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டனர்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சியின் தமிழ்நாட்டுக் கிளைத்தலைவர் திரு. பி. இராமச்சந்திரனும் இவர்களுள் அடங்குவார்.

இரண்டுவருடங்களுக்கு ஒரு முறை தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் 6 பேரின் பதவிக்காலம் முடிவடைந்ததும் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளையில் லோகசபை இடைத் தேர்தல் ஒன்றிற்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த அ இ அ தி மு கவைச் சேர்ந்த திருமதி சத்தியவாணி மத்துவும்ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் மனுமட்டுமே செல்லக்கூடியதாகஇருந்தமையால் இவர் ஏகமனதாகத் தெரிவானுர். (இ)

இலங்கையில்

## "குடும்ப ஆட்சியை மக்கள் விரும்பவில்லை"

### மேற்கு ஜெர்மன் பத்திரிகை கருத்து

லண்டன், ஜூலை. 24
"முன்னாள் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தமது அமைச்சரவையில் தமது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே முக்கிய பதவிகள் தொடுத்ததை மக்கள் விரும்பவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன" இவ்வாறு ஜெர்மனின் பரபல தினசரியான 'டைவற்' கருத்து வெளியிட்டுள்ளது.

தனது ஆசிரியத் தலையங்கத்தில் இப்பத்திரிகை இலங்கையின் புதிய அரசுக்கு மேற்கு நாடுகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று மேலும் கூறியுள்ளது.

## இணக்கம்

கெய்ரோ, ஜூலை. 24
எகிப்தும், லிபியாவும் தற்காலிகயுத்த நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளன. (உ)

## "இந்திய வானெலியில் மாற்றம் செய்யப்படும்"

### பிரதமர் தேசாய் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை. 24
"இந்திய வானெலியை சொந்த செல்வாக்குக்காக அரசாங்கம் பயன்படுத்தாது" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அறிவித்துள்ளார்.

பம்பாய் வானெலி நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதமர் பேசுகையில் மேலும் கூறியதாவது: "இந்திய வானெலியை நாட்டு மக்கள் நம்புவது குறைவாகவே உள்ளது. இதற்குக் காரணம் வானெலியும் டெலிவிஷனும் தனிப்பட்ட, அரசியல்நோக்கங்களுக்காகப்பயன்படுத்தப்பட்டு வந்ததுதான். இந்த நிலையை மாற்றியமைக்க ஜனதா அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கலை ஆக்கத்துக்கே வானெலியில் இனிமேல் முக்கிய இடமளிக்கப்படும்" [உ]

## மூன்று நாள் பரிசளிப்புவிழா

சுழிபுரம்; ஞாயிறு
வழக்கம்பரை சனசமூக பஜனை சபையினர் நடத்திய அபிராமியந்தாதி மனனப் போட்டியில் பங்குகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு மூன்று பிரிவுகளாகப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. நிலைய பஜனை உறுப்பினர், உள்ளூர் பகுதியினர் வெளியூர் எனப்பிரிக்கப்பட்டுத் திறமை அடிப்படையில் பரிசுகள்வழங்கப்படும். பஜனைச் சபையினரின் நிபந்தனைகள் யாவும் பொதுவாகத் தரப்பட்டுப் பரிசுகள் பலருக்கு வழங்கப்படவுள்ளன. போட்டியில் எண்பத்திரண்டுபேர் பங்கு கொண்டனர்.

பரிசளிப்பு மூன்று தினங்கள் நடைபெறும். (அ)




டயசினென் மியாபால் பாசா பழுப்பு தத்துவெட்டியை கொல்லுகிறது

விவசாயியின் மிகக் கெட்ட எதிரியாகிய
பழுப்பு தத்து வெட்டியை வாழவிடாமற் தடுக்க லங்கெம்மின்
சக்திமிக்க மூன்று பூச்சிக் கொல்லிகளில் ஒன்றை உபயோகியுங்கள்.

அவைதான் டயசினென், மியாபால், பாசா.
இலகுவாகக் கையாற் தூவக்கூடிய மணிகளாக டயசினென். தெளிப்பதற்குகந்தவை மியாபாலும், பாசாவும்.
விவசாயிகளே! லங்கெம் பூச்சிக் கொல்லிகளையே நம்புங்கள். பழுப்புத்தத்து வெட்டியையும், நெற்பயிர்களைத் தாக்கும் இதர பூச்சிகளையும் முற்றுக, விரைவாக அழியுங்கள்



LANKEM லங்கெம்

# எதிர்க்கட்சித் தலைவராக 'அமிர்' வருவது உறுதி!

யாழ்ப்பாணம், திங்கள்
எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கமே தெரிவுசெய்யப்படுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.



இதே சமயம் பேரவையில் மிகக் குறைந்த ஸ்தானங்களைப் பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சியில் தனிக் குழுவாக இயங்கலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியஅரசுப்பேரவை உறுப்பினர்கள், எதிர்வரும் 29-ம் திகதி வவனியாவில் கூடுகின்றார்கள்.

இலங்கை தேசிய அரசுப் பேரவையில், யார் எதிர்க்கட்சித் தலைவராக இயங்குவது என்பதுபற்றியும், பிரதமகொறடாவாக யாரை நியமிப்பது என்பது பற்றியும் அன்று முடிவெடுப்பர்.

எதிர்க்கட்சித் தலைவராக காங்கேசன்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும், கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட வேண்டுமென, முக்கிய கூட்டணி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும், வேறு முக்கியஸ்தர்களும் மேலிடங்களுக்குச் சிபார்சு செய்துள்ளனரென்று தெரிகின்றது. பாராளுமன்ற கொறடாவாக, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, திருவாளர்கள் செ, இராசதுரையை அல்லது இரா. சம்பந்தனைத் தெரிவு செய்யவேண்டுமென இவர்கள் வற்புறுத்தியுள்ளனராம்.

தேசிய அரசுப் பேரவைக் கூட்டணி பிரமுகர்கள் 29-ம் திகதி வவனியாவில் கூட வேண்டுமென அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திரு எஸ்.கதிரவேலுப்பிள்ளை இதற்கான ஒழுங்கைச் செய்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு இன்றைய அரசியல் நிலைமை பற்றி விளக்குவதற்காக 30-ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடவடிக்கைக்குழு கூடுகின்றது. நடவடிக்கைக் குழுவின் முடிவை அடுத்து பகிரங்க அறிக்கை ஒன்று வெளியிடுவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது. (கெ)

## பதவியேற்றுள்ள புதிய பிரதி அமைச்சர்கள்

கொழும்பு, ஞாயிறு
ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுமாலை பதவிப் பிரமாணம் செய்துகொண்ட 26 பிரதியமைச்சர்கள் விபரம் வருமாறு:-

ரி. பி. வெரப்பிட்டிய: பாதுகாப்பு.

எம். எச். எம். நைனா மரிக்கார் திட்டமிடல் பொருளாதாரம்.

ரி. பி. வெலகெதர - திட்ட அமுல்.

ரணில்விக்கிரமவிக்கிரமசிங்கா-வெளிவிவகாரம்.

ஏ. எம். அதிகாரி - நீர்ப்பாசனம் மின்சக்தி, நெடுஞ்சாலை.

எம். எஸ். அமரசிறி - வர்த்தகம்.

பேர்ஸி சமரவீர: பொதுநிர்வாகம், உள்நாட்டு விவகாரம்.

எட்வின் திலகரத்ன: பாராளுமன்ற, விளையாட்டுத்துறை.

எச். குலரத்ன: போக்குவரத்து.

எம். எம். அப்துல் மஜீத்: விவசாயம், காணி.

ஜே. எல். சிறிசேன: சமூக சேவைகள்.

எஸ் ஸி.ராஜகருணா உணவு கூட்டுறவு

ஆர். எம். தர்மதாசபண்டா: புடவைக் கைத்தொழில்.

கே. நந்தா மத்யூ: கப்பல் விமான போக்குவரத்து உல்லாசப் பயணம்.

லயனல் ஜயதிலக: கல்வி.

ஷெல்டன் ரணராஜா: நிதி.

பெஸ்டஸ் பெரேரா: நீதி.

ஏ. டென்ஸில் பெர்னாண்டோ: கைத்தொழில்விஞ்ஞானம்.

பி. ஸி. இம்புலான: உள்ளூராட்சி வீடமைப்பு, நிர்மாணத்துறை.

டபிள்யூ. எம். ரி. பண்டா கலாச்சாரம்.

எஸ். சுனில் அபய சுந்தர: கடற்றொழில்.

தர்மசேன ஆட்டிகல: சுகாதாரம்.

சந்திர கருணாரத்ன; தகவல் ஒலிபரப்பு.

பிலாப்பிட்டிய: தபால் தந்தி

மைக்கல்பெரேரா: தொழில்

அலிக் அலுவிஹார: தோட்டக் கைத்தொழில்.

## தமிழர் கூட்டணியே பிரதான எதிர்க்கட்சி

—ஜே. ஆர்

கொழும்பு, ஞாயிறு
தமிழர் விடுதலைக் கூட்டணியே பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் என்று பிரதமர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன கூறினர்.

பிரதமராக இன்று பதவியேற்ற திரு ஜே ஆர். ஜயவர்த்தன நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினர்.

வலுவான ஓர் எதிர்க்கட்சி அமையும் என்று தாம் எதிர்பார்த்ததாகவும் ஆனால் அப்படி அமையாதது குறித்து தாம் கவலைப்படுவதாகவும் திரு. ஜெயவர்த்தன கூறினர். (இ-ம)

# புதிய சபாநாயகர் அல்விஸ்?

கொழும்பு, ஞாயிறு
கோட்டே அங்கத்தவர் திரு ஆனந்ததிஸ டி அல்விஸ், தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராகத் தெரிவு செய்யப்படலாம்.

1952-ம் ஆண்டிலும் 1956-ம ஆண்டிலும் நடைபெற்ற தேர்தல்களில் திரு. அல்விஸ், கோட்டே தொகுதியில் போட்டியிட்டபோதிலும் வெற்றிபெறவில்லை. இம்முறை தான் முதற் தடவையாக வெற்றிபெற்றுர்.

முன்னுள் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்னவும் கோட்டே தொகுதியிலிருந்தே தேசிய அரசுப் பேரவைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மண்டபத்தை மீண்டும் ஒப்படைக்கிறுர் ஜெ. ஆர்

கொழும்பு, ஞாயிறு
மகாமலுவ மண்டபத்தை தலதாமாளிகையிடம் ஒப்படைப்பதற்கு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முடிவுசெய்துள்ளார்.

இம்மண்டபத்தை முன்னைய அரசாங்கம் பொறுப்பேற்றிருந்தது.

இதுதொடர்பான கையளிப்பு வைபவம் இம்மாதம் 27-ம் திகதி கண்டியில் நடைபெறும். இதனையடுத்து பிரதமர் 28-ம் திகதி நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்துவார். (உ)

## இன்று சொற்பொழிவு

அரியாலை, திங்கள்
இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குறுகியகால விஜயஞ் செய்திருக்கும் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆண்டகை ஜோன் அடிகளார் ''கிறிஸ்து வழிகாட்டி'' என்னும் விடயம் குறித்து யாழ்ப்பாணம் ட்றிம்மர் மண்டபத்தில் இன்றுமாலை உரையாற்றுகிருர். (அ)

## நாளை திறக்கப்படும்


வேலணை, ஞாயிறு
ஊர்காவற்றுறைத் தொகுதி அபிவிருத்திச்சபையின் மத்திய செயலகமொன்றை இம்மாதம் 26-ம் திகதி காலையில் வேலணைப்பகுதி உதவி அரசசங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் திறந்துவைக்கவிருக்கிறுர். இக்காரியாலயம் வேலணையில் அமைந்துள்ளது. (அ)

## மேலும் ஒருவர் ராஜிஞமா

மாாவிட்டபுரம், ஞாயிறு
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் நடத்தையில் அதிருப்தியடைந்த காரணமாக சங்கஇயக்குநர் சபையிலிருந்து மேலும் ஒருவர் ராஜிஞமா செய்துள்ளார்.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு.ரி.பி.முருகையா சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் வைத்து பெண் ஊழியர் ஒருவரை அவமானப்படுத்தும் வகையில் பேசிய தகாத வார்த்தையை அதே இயக்குநர் சபைக்கூட்டத்தில் வைத்து வாபஸ் பெறவேண்டுமென சங்க ஊழியர் சங்கம் அவரைக் கோரியுள்ளதும் திரு முருகையாவின் நடத்தையை ஆட்சேபித்து இயக்குனர்சபை உறுப்பினரான திரு.எஸ் கணபதிப்பிள்ளை தமது பதவியை ராஜிஞமா செய்தள்ளதும் தெரிந்ததே.

தற்போது மேலும் ஒருஇயக்குநர் சபை உறுப்பினரான திரு.ரி.தம்பிஐயா தமது உறுப்பினர் பதவியை ராஜிஞமா செய்துள்ளார். (அ)



வேலர்: என்னுடைய மகனை எம். பியுடைய கரெக்டர் சேட்டிபிக்கற்றுடன் உத்தியோகத்திற்கு வரச்செல்லி வந்திருக்கு...என்ன செய்வதென்று தெரியவில்லை.

பயிலர்: என்...எம். பியை கரெக்டர்சேட்டிபிக்கற் கேக்கிறது தானே!

வேலர்: எந்த முகத்தோடை போய்க் கேட்கிறது. தேர்தல் காலம் என்ரைமேண் அவருக்கு கூடாத கரெக்டர் சேற்றிபிக்கற் கொடுத்தவன். சுவரெல்லாம் அவரைப் பற்றிக் கூடாமல் எழுதித்திரிந்தவன்.

— சுந்தர்

## வெஸ்லி

அண்மையில் மறைந்த திரு வெஸ்லி செல்வரத்தினத்தின் பிரிவு அன்னுரின் நண்பர்களையும் அவரின் சேவை நலம் உணர்ந்தோரையும் எளிதில் மறக்கமுடியாத கவலையில் ஆழ்த்தியுள்ளது.

முதன்முதலாக அறிமுகமாகும் ஒருவருடன்கூட திரு. செல்வரத்தினம் நட்புப் பண்புடன் இன்சொல்லில் குதூகலமாகப் பேசுவார்.

காரியாதிகாரியாகவும், யாழ் பொருசனத் தொடர்பு அதிகாரியாகவும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள உதவி ஆணையாளராகவும் கடமை புரிந்த அவர், தனது உத்தியோகத்துறையில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்றவராகவும். எப்பெரும் பணியினையும் மற்றவர்களையும் அன்பால் அணைத்துச் சேர்த்துத் திறம்படச்செய்து நிறைவேற்றும் ஆற்றலும், சுறுசுறுப்பும் மிக்கவராகவும் மிளிர்ந்தார்.

தான் ஓர் உயர்ந்த உத்தியோகத்தர் என்ற 'செட்டு' அவரிடம இருந்ததில்லை. பொதுமக்களுடன் அவர் மிகவும் நெருங்கிப் பழகினர். அவர்களுடைய தேவைகளையும், பிரச்சினைகளையும் நன்கு அவர்களிடம் கேட்டறிந்து அவற்றைத் தீர்க்கச் சேவையாற்றினர்.

அவரை எல்லோரும் அன்பாக 'வெஸ்லி' என்று அழைப்பார்கள். அந்த 'வெஸ்லி' என்ற சொல் நகைக்சுவையுடன சரளமாகப் பேசும் அன்புக் குரலுடைய கம்பீரமான நெடிய உருவத்தையே எம் முன் நிறுத்தும்.

அந்த உருவத்தை நேரிலே என்றுதான் இனிக் காண்பதோ! நேற்று இருந்தார் இன்று இல்லையென்ற பெருமையுடைய இந்த உலகில் இருக்கும் நாம் திரு வெஸ்லி செல்வரத்தினத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

—அருள்

## மொறட்டுவ கோஷ்டி வெற்றி

அரியாலை, ஞாயிறு
கல்வி அமைச்சின் ஆதரவின் கீழ் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்ட 16 வயதுக் குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வடபகுதியில் தெரிவு செய்யப்பட்ட பரி.யோவான் கல்லூரிக்கோஷ்டிக்கும் தென்மாகாணத்தைச் சேர்ந்த மொறட்டுவ ஸ்ரீ சுமங்கல மகாவித்தியாலயக் கோஷ்டிக்குமிடையில் யாழ். பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் ஸ்ரீ சுமங்கல மகா வித்தியாலயக் கோஷ்டி 4 விக்கட்டுகளாலும் 68 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி முதலாம் ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களையும், இரண்டாம் ஆட்டத்தில் 5 விக்கட்டு நஷ்டத்திற்கு 46 ஓட்டங்களையும் பெற்றது. முதலாம் ஆட்டத்தில் செல்வன் எஸ். கருணகுமார் 44 ஓட்டங்களையும், இரண்டாம் ஆட்டத்தில் செல்வன் ஆர். சிறீதரன் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்ரீ சுமங்கல மகா வித்தியாலயகோஷ்டி 6 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 162 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தைநிறுத்திக்கொண்டது. இக்கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் ஏ. பாலிதா வெளியேருமல் 52 ஓட்டங்களையும், செல்வன் ஏ வீரசிங்கா வெளியேருமல் 30 ஓட்டங்களையும், செல்வன் கே. சமான் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்தெறியில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் ஆர். சிறீதரன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளைப் பெற்றுர்.

ஸ்ரீ சுமங்கல மகாவித்தியாலயக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் எம். யூ. சி. யே. பெரனண்டோ 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் ஈ. ஏ. ஆர். பண்டபொல 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் செல்வன் யே. பெர்னண்டோ 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் 2-ம்ஆட்டத்தில் செல்வன் ஆர். விக்கிரமாதித்தன் 193 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுக்களையும், செல்வன் எம். வி. யே. பெர்னண்டோ 8ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுகளையும் பெற்றனர். (உ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

சாந்தி யாழ். நகர் போன்; 7642 தினசரி 10-30, 9-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். - பத்மினி - நம்பியார்
ராணி சம்யுக்தா

RIO (Jaffna) Daily 10-30 ,4-45,7-15, 9-45 p.m.
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE
(Color-Scope)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்; 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா (யாழ்நகர்) போன்; 7180
79-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கடைசிவாரம்
சிவராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL (JAFFNA) Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

82-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ரி. ஆர். ராஜகுமாரி
குலேபகாவலி

30-7-77 முதல்
எம். ஜி. ஆர் — லதா நடித்த
உழைக்கும் கரங்கள்


# காணித் தகராறு: பெண் கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

காணித் தகராரின் எதிரொலியாக பெண் ஒருவர் கத்தியால் குத்திக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் உடுவிலில்நடைபெற்றுள்ளது.

அருளம்மா (50வயது)என்ற இப்பெண்ணின் கொலை தொடர்பான சந்தேகநபர் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோஷ்டி மோதலையடுத்து இக்கொலை நடைபெற்றதாகவும் காணித்தகராறே இதற்குக் காரணமென்றும் சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் இ. ஏ. ஏ. காதர் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவருகிறது. (உ)

## "பசிப்பிணியைப் போக்க செல்வ நாடுகள் முன்வர வேண்டும்"

அரியாலை, ஞாயிறு

உணவுப் பற்றுக்குறை காரணமாகவும்,போதிய ஊட்டச்சத்து இல்லாத காரணத்தாலும் உலகில் பல்லாயிரக் கணக்கான மக்கள் நாளாந்தம் மரணித்து வருகிறார்கள். இன்றும் இருபது ஆண்டுகளில் உணவின்மையால் ஏற்படும் மரணங்கள் அதிகரிக்குமென்று உலக உணவுஸ்தாபன அறிஞர்கள் கூறிவருகிறார்கள். ஆசிய நாட்டைச் சேர்ந்த இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் உணவுப் பிரச்னையால் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றன. செல்வந்த நாடுகள் வறிய நாடுகளில் தோன்றியுள்ள பசிப்பிணியை நீக்க தம்மாலானதைச் செய்ய முன்வர வேண்டும்"

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோப்பு ஆலய குருவான அருட்திரு சர்வானந்தம் காலை ஆராதனையில் பேசுகை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "யேசுவானவர் ஐந்து அப்பங்களையும் மூன்று மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்ததுபோல, கிறீஸ்தவர்களாகிய நாமும் பஞ்சம், பட்டினியில் வாடும் நம் அயலவரையும் நாட்டையும் நம்மாலான உதவிகளைச் செய்து ஓரளவு போஷிக்க முன்வர வேண்டும்"என்றார். (அ)

## சிவபாதசுந்தரனர் நூற்றுண்டு விழா கொண்டாடத் தீர்மானம்

சுழிபுரம், ஞாயிறு

"சைவப் பெரியார் சிவபாத சுந்தரனரின் மாணுக்கனுகக் கிடைத்த வாய்ப்பு ஒன்றே எனது வாழ்வின் பெரும் பேறும். சிவபாதசுந்தரனர் எழுதிய நூல்கள் இன்று எம்மிடம் இல்லாமல்போனமை கவலைக்குரியது. பெரியார் சிவபாத சுந்தரனர் எமக்குக் குருவாகக் கிடைத்ததால்தான் நாம் கல்விமான்களாகத் திகழ முடிந்தது" என்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனர் நினைவுதின விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. க. கிருஷ்ணபிள்ளை கூறினர்.

யாழ். இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு. என். சபாரத்தினம் உட்பட பலர்பேசினர்எதிர்வரும்ஆண்டு பெரியாரின் நூற்றுண்டு விழாவைச் சிறப்பாக நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## மதவாச்சிய இன்ஸ்பெக்டர் திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

மதவாச்சிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ராமநாயகா சங்கானைபொலிஸ் நிலையத்திற்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மதவாச்சிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகச் சங்கானையில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் நியால்டீன் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். (உ)

## உதவிப்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறியதையடுத்து காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அதிபர் தீவிர பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். கூட்டம் நடந்து முடியும் வரை பொலிசார் எவரையும் காண முடியவில்லை.

அமைதியாகக் கூட்டம் நடத்த உதவியமைக்காக உதவிப் பொலிஸ் அதிபருக்கு திரு. அமிர்தலிங்கம் நன்றி தெரிவித்தார். (அ)


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00 & 9-45 P. M.
BEFORE AND AFTER LOVE
(Strictly for adults)



வரி விளம்பரம்

தேவை

நெசவுத் தொழிலில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு: அ. க. தர்மலிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.
6707

பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B. ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
6686


## புதிய நிர்வாகிகள்

அரியாலை,ஞாயிறு

யாழ்ப்பாண லியோ கிளப் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்:-

தலைவர்: ஏ. ஏ. ஜெராட், செயலாளர்: பி. சுகுமார், பொருளாளர்:எம். அன்பழகன் உபதலைவர்கள்: எம். டபிள்யூ. அலோசியஸ், ஏ.ஈ.எம்.ராசேந்திரா, டிரெக்டர்கள்; யே. ரி. ஆர். ராசேந்திரா.ஜி.பி.பிராங்கிலின்.ரெமேஸ்:ஜி.ஆர். அமிர்தவாசகம், ஒழுங்காளர்: ஜே. டி. துரைசிங்கம். (அ)

......

## 'திரு'வின் கோவில் தரிசனம்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத்தொகுதி தேசிய பேரவை புதிய உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு யாழ்.கச்சேரியிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் வழக்கம்பரை அம்மன் கோயிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்து அர்ச்சனை செய்து கொண்டார். பெருந்தொகையான ஆதரவாளர்களும் இதில் கலந்து கொண்டனர். திரு. தா. திருநாவுக்கரசு முதல் முதலாக தேர்தல் பிரசார வேலையை ஆரம்பித்த போதும் வழக்கம்பரை அம்மன் கோயிலில் பூசைசெய்து தேங்காய் உடைத்து ஆரம்பித்தார்.

## மரண அறிவித்தல்

திருமதி கிறேஸ் ஞானம்மா பொன்னுத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியை - நல்லூர் சாதனைபாடசாலை) காலமாகிவிட்டார். இவர் யாழ்.மத்திய கல்லூரியில் ஆசிரியராயிருந்து காலமான திரு. L. W. பொன்னுத்துரையின் அன்பு மனைவியாவார். இவரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 25-7-77 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு பரிசுத்த யாக்கோபு ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

6758

278 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


H. N. C. E.
40 கட்டுரை மஞ்சரி
(உயர்தர வகுப்புக்குரியது)
தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சை [H. N. C.E.] யின் தமிழ்மொழி ஸமயப் பாடத்திற்கு
உதவும் வகையில் அமைந்த கட்டுரை நூல் இதுவொன்றே. மொழிநடை, பந்தியமைப்பு, விடயக் கட்டுக்கோப்பு முதலிய அம்சங்கள் பலவும் திறம்பட அமைந்தது. மொழியாற்றல் விருத்திக்கும் கட்டுரை வன்மை வளர்ச்சிக்கும் உற்றதுணையாய் அமைவது — 40 கட்டுரை மஞ்சரி.
விலை ரூ. 6-00
கிடைக்குமிடம்:
தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்.

ஈழநாடு
EELANADU

## ரயில் விபத்து: 12பேர்பலி

கியோல், ஜூலை24
தென்கொரியாவில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் பன்னிரண்டுபேர் மாண்டனர். படுகாயமடைந்த 21 பேரின்நிலை கவலைக்கிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள்...

]1-ம் பக்கத் தொடர்ச்சி]
ளார்.
திருமதி பண்டாரநாயக்கா

## தேர்தலின் பின்,...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
போன்ற பகுதிகளில் பதட்ட நிலை நிலவுகிறது.

**கல்குடாவில்**

கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த செங்கலடியில் நடந்த சம்பவம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பிரதமர் திரு ஜே ஆர். ஜெயவர்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள ஒரு தந்தியில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்துவதாகவும் இதனை உடன் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருக்கிறார்.

பல இடங்களிலும் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மேலும் கூறியிருப்பதாவது:

"நாட்டு மக்களைச் சுபீட்சமான பாதையில் வழிநடத்திச் செல்லப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

"முற்போக்குப் பொருளாதாரத் திட்டத்தைச் செயற்படுத்தக்கூடிய ஒரே கட்சி சுதந்திரக்கட்சிதான் என்பதை 20 லட்சம் மக்கள் ஏற்றுள்ளனர்."

"எமது சோஷலிச நடவடிக்கைகளுக்குத் தற்காலிகத் தடை ஏற்பட்டுள்ளபோதிலும் பொதுமக்களுக்காக உழைத்த அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை நினைவுகூர்ந்து ஜனநாயக சோஷலிசத்தை அடைய என்னை அர்ப்பணித்துக்கொள்கிறேன்.

"மக்கள் பூசல்களை மறந்து பொறுமையுடன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்." [உ]

# வாழ்க்கைச் செலவு குறையும்?

## மந்திரிசபை ஆலோசனை

**கொழும்பு, ஞாயிறு வாழ்க்கைச் செலவினங்களைக் குறைப்பதிலும்உணவுப்பொருட்களைச் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பதிலும் புதிய அரசு தீவிரகவனம் செலுத்தும்.**

நேற்று நடைபெற்ற புதியமந்திரிசபையின் முதலாவது கூட்டத்தில் இது அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய எதிர்வரும் 27 ம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கும் மகாமலுவ மண்டப கையளிப்பு விழாவின்பின் அன்றிரவு முழுவதும் தலதாமாளிகையில் பிரித் ஓதப்படும்.

**இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நிகழ்ச்சிகள்**

மறுதினம் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நிகழ்ச்சிகளும் கண்டியில் இடம் பெறும்.

28-ந் திகதி பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன தலதா மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்த விருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கோண்டாவில் டிப்போவில் பாற்சாதம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபை, கோண்டாவில் டிப்போவில் இன்று காலை சகல மக்களுக்கும் ஐ. தே. க. பெருவெற்றியீட்டியமை குறித்து பால்சாதம் வழங்கப்படவிருக்கிறது.

தேர்தலில் ஐ தே. கட்சி வெற்றியீட்டினால் பச்சை வர்ணம் கலந்த பால்சாதம் வழங்குவதாகத் தீர்மானித்ததற்கிணங்க இவ்வைபவம் நடைபெறுகின்றது. இதற்கான ஒழுங்குகளைவடமாகாண பஸ் தொழிலாளர், ஐ. தே. க. தொழிற்சங்க துணைச்செயலாளர் திரு. எம். தங்கராசா மேற்கொண்டுள்ளார். (கெ-அ

## கூப்பன்கள் யாருடையது?

யாழ்ப்பாணம், திங்.
யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் எட்டு கூப்பன்களும், ஒரு பங்கீட்டு அட்டையும் ஒரு நீல நிறப்பையினுள் இருக்கக் கண்டெடுக்கப்பட்டு பஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. ஏ. சிவலோகநாதனால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதற்குரியவர், தகுந்த அத்தாட்சி காட்டி எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (கு)

## திரிபுராவில் கலப்பு அரசு

புதுடில்லி, ஜூலை24
திரிபுராவில், புதிய கலப்பு அரசாங்கம் அமைக்கப்படவிருக்கிறது.

மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியும் ஜனதாஅரசும் இணைந்த அமைப்பு அரசாங்கமே திரிபுராவில் ஏற்படவிருக்கிறது.

## இந்திய ஜனாதிபதி பதவியேற்பு இன்று நேரடி வர்ணனை

புதுடில்லி ஜூலை 24
புதிய பாரத ஜனாதிபதியாக நாளை திங்கட்கிழமை பதவியேற்கவிருக்கும் திரு. நீலன் சஞ்சீவரெட்டியின் பதவியேற்பு வைபவத்தை அகில இந்திய வானொலி நேரடி அஞ்சல் செய்யும். ஆங்கிலம் ஹிந்தி ஆகிய மொழிகளில் நேரடி வர்ணனை இடம்பெறும். (உ)

# அமைதியான அதிகார மாற்றத்துக்குப் பாராட்டு

## இந்தியப்பிரதமரின் செய்தி

கொழும்பு, ஞாயிறு
"இலங்கைக்கும் பாரதத்திற்கும் உள்ள பரஸ்பர நட்புறவு வளரவேண்டும்- இந்த நட்புறவும்- ஒற்றுமையும் பிராந்திய ஸ்திரப்பாட்டைக் காப்பதுடன் உலகசமாதானம் வலுப்பெறவும் உதவும்," என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இலங்கைப்பிரதமர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

இச்செய்தியில் திரு.தேசாய் மேலும்கூறியிருப்பதாவது இலங்கைபுதியயுகத்தில் இப்போது காலடி எடுத்து வைத்திருக்கிறது. புதிய பிரதமரான உங்கள் தலைமையில் இலங்கைக்குப் பெரும் நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

அமைதியான விதத்தில் ஜனநாயக அடிப்படையில் ஆட்சி மாற்றத்தை இலங்கை மக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதை நானும் என் நாட்டு மக்களும் பாராட்டுகிறோம் ஆசியாவில் ஜனநாயகத்துக்குக்கிடைத்த மற்றொரு வெற்றி இதுவாகும்.

இலங்கையில் ஐ. தே. க. பெற்ற பெருவெற்றிக்கும் பாரதத்தில் ஜனதாக் கட்சி பெற்ற பெருவெற்றிக்கும் ஒற்றுமை உண்டு என்றும் பாரதப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதமர் திரு. ஜெயவர்த்தனவுக்கு முதன் முதலாகக் கிடைத்த வாழ்த்துச்செய்தி இதுவேயாகும் (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 25ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

ரோறு தேர்தல் போட்டி

பரிசு பெறுவோர் விபரம்

1-ம் பரிசாக ரூ. 250 பெறுபவர்:

செல்வன் சோ. இராசகுலபாலன்
மே/பா, எஸ். நகுலாதேவி,
குளப்பிட்டி சந்தி,
கொக்குவில்.

2-ம் பரிசாக ரூ. 150 பெறுபவர்:

செல்வன் பெ. மணியம்
இராஜா ரெயிலர் கடை,
இல. 450,
தருமபுரம்.

3-ம் பரிசாக ரூ. 100 பெறுபவர்:

செல்வன் செ. செல்வரத்தினம்
9, பாரதி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

ஆறுதல் பரிசாக தலா ரூபா 50 பெறுபவர்கள்

1. செல்வன் ரி. மகேந்திரன்,
53 பீ, ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.
2. செல்வி ச. பிரமிளா,
நடராஜா வீதி,
கொக்குவில்.
3. செல்வன் ந. சோமஸ்கந்தராஜா,
யாழ். மெட்டல் நிலையம்,
6. நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
4. செல்வன் எஸ். தயாபரன்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
5. செல்வன் இ. குலாம் குசெயின்,
புகாணி றேடேர்ஸ்,
62, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
6. செல்வன் சி. ஜெகநாதன்,
அசோகா போட்டோ,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
7. செல்வன் ச. அல்பிரட்
ரெம்பிள் ரோட்.
யாழ்ப்பாணம்.
8. செல்வன் சி. பொன்னம்பலநாதன்,
திருநெல்வேலி வடக்கு,
பலாலி ரோட்,
யாழ்ப்பாணம்.
9. செல்வன் பற்றிக் சவரிமுத்து,
159, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.
10. செல்வன் நா. பாக்கியலிங்கம்,
அம்புக்குட்டியா வளவு,
வல்வெட்டி.

மேற்படி பரிசில்களை வெற்றியீட்டியவர்கள் எமது ஸ்தாபனத்திற்கு தாமாகவே நேரில் வந்து தத்தமது பரிசுப்பணத்தைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகாமை இயக்குநர்

த ரோறு லிமிட்டெட்.
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.